**<u>உலக தாய்மொழி தினம் – 21.02.2024</u>**

புஷ்பலதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் உலக தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டது. 6ஆம் வகுப்பு மாணவர்கள் பண்டைய தமிழ் இலக்கியங்களை நினைவூட்டும் வகையில் ஓலைச்சுவடிகள் செய்தும், 7ஆம் வகுப்பு மாணவர்கள் ஆதிச்சல்லூர், கீழடி உட்பட தமிழ் நாகரிகத் தொட்டிலாய் விளங்கும் தமிழ்நாட்டின் பல்வேறு அகழாய்வு இடங்கள் தொடர்பான நிழற்படங்களைச் சேகரித்து வந்து, அதனை வகுப்பறையில் தொகுத்தும், 8ஆம் வகுப்பு மாணவர்கள் பண்டைய தமிழ் எழுத்துகளைக் கொண்ட நாணயங்கள், கல்வெட்டுகள், செப்புத் தகடுகள், நடுகற்கள் செய்தும் கொண்டாடினர்.